# NMSSVN COLLEGE COMMERCE ALUMNAE TRUST
## SVN-COMAT

Saradha Shopping Centre II Floor, 39-40, Workshop Road, Simmakkal, Madurai - 625 001.
☎ 0452-2623656 09344125312 ★ email : svncomat@gmail.com website: www.svncomat.org



CHAIRMAN
P. JAWAHAR

DIRECTOR - ADMINISTRATION
G. JEYASEELAN

DIRECTOR - FINANCE
S.M. VEERAMANI

VICE CHAIRMAN
A.K.D. KOODALINGAM

JOINT DIRECTOR - ADMINISTRATION
S. SHENBAGANATHAN & T.P.P.K. RATHAKRISHNAN


அன்புடையீர்

நாள் : 5 - 02 - 2011

நமது பாரம்பரியமிக்க NMSSVN கல்லூரியின் வணிகவியல் துறையில் பயின்ற முன்னாள் மாணவர்கள் அனைவரின் நலனை மேம்படுத்தும் விதமாக நமது கல்லூரியின் முன்னாள் முதல்வரும் வணிகவியல் துறையின் தலைவருமான பேராசிரியர் முனைவர் K.நடராஜன் அவர்களின் முன்முயற்சியாலும் வணிகவியல் துறையின் பழைய மாணவரும் கல்லூரியின் தற்போதய செயலாளர்/ தாளாளர் Dr. பெரீஸ் மகேந்திரவேல் மற்றும் முன்னாள் பேராசிரியர் V. திலகராஜன் அவர்களின் சீரிய வழிநடத்தலாலும் வணிகவியல் துறை பழைய மாணவர்கள் கூட்டம் 29.8.2010 அன்று நம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

1970 - களில் துவக்கப்பட்ட நமது வணிகவியல் துறையின் பழைய மாணவர்கள் ஏறக்குறைய 200 நண்பர்கள் மிகுந்த முனைப்புடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் நமது வணிகவியல் துறை பழைய மாணவர்களின் வாரிசுகளும் பயன் படும் வகையில் ஒரு அறக்கட்டளை அமைப்பது பற்றிய யோசனை முன்மொழியப்பட்டது. அனைத்து முன்னாள் மாணவர்களின் கருத்தினையும் கேட்டறிந்து நமது கல்லூரியில் பயின்ற வணிகவியல் துறை முன்னாள் மாணவர்களின் வாரிசுகளுக்கு ஏதாவது ஒரு கால கட்டத்தில் நிதி நெருக்கடி காரணமாக கல்வி கற்பதில் ஏற்படும் இடர்களை களையும் மைய நோக்கத்துடன் கூடிய ஒரு அறக்கட்டளையை அமைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அறக்கட்டளை அமைப்பதற்குரிய நிர்வாக மற்றும் சட்ட விதி முறைகளை வரையறுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழு உறுப்பினர்கள் பலமுறை கூடி விவாதித்து NMSSVN COLLEGE COMMERCE ALUMNAE TRUST - SVN-COMAT என்ற பெயரில் அறக்கட்டளை துவங்க தீர்மானிக்கப்பட்டது.

அறக்கட்டளையின் அமைப்பு, செயல்பாடு மற்றும் சட்டதிட்டங்கள் மிகக் கூர்மையாக விவாதிக்கப்பட்டு பேராசிரியர் K. நடராஜன், பேராசிரியர் V. திலகராஜன் மற்றும் பழைய மாணவர்கள் திருவாளர்கள் பெரீஸ் மகேந்திரவேல், தனசேகரன் மற்றும் வீரமணி ஆகியோரை அறக்கட்டளையின் நிறுவனர்களாகக் கொண்டு இந்திய அறக்கட்டளை சட்டத்தின் கீழ் 30.12.2010 தேதியன்று NMSSVN COLLEGE COMMERCE ALUMNAE TRUST பதிவு எண் 648/ 2010 ஆக பதிவு செய்யப்பட்டது.

15 முன்னாள் மாணவர்களை உறுப்பினர்களாக கொண்ட முதல் அறங்காவலர் குழுவும், 6 உறுப்பினர்கள் கொண்ட முதல் ஆட்சி மன்றக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளையை சீரிய முறையில் வழிநடத்தி செல்ல நமது கல்லூரியின் வணிகவியல் துறையின் முன்னாள் மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஆயுட்கால உறுப்பினர்களாக சேர்க்கும் சீரிய பணியினை முனைப்புடன் துவங்க வேண்டுமென்றும் தீர்மானித்து ஆயுட்கால சந்தா ரூ.1000/- ( ரூபாய் ஆயிரம் மட்டும் ) பெற்று அனைத்து முன்னாள் வணிகவியல் துறை மாணவர்களையும் உறுப்பினராக பதிவு செய்யும் பணியினை முதன்மை படுத்தி இந்த அறக்கட்டளை பணியினை கொண்டு செல்லவும் தீர்மானிக்கப்பட்டது.

நமது SVN-COMAT அறக்கட்டளையை பற்றிய இந்த தகவலை நமது கல்லூரி வணிகவியல் துறையின் முன்னாள் மாணவ நண்பர்களிடத்தே கொண்டு சென்று அவர்கள் அனைவரையும் அறக்கட்டளையின் ஆயுட்கால உறுப்பினராக்கிட ( ரூ.1000/- மட்டும் செலுத்தி ) ஒத்துழைக்கும் படி வேண்டுகிறோம்.

மேலும் சீரிய இக்கல்விச் சேவை சிறக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு நமது அறக்கட்டளையின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தும் விதமாக அனைத்து வணிகவியல் துறை முன்னாள் மாணவர்களும் தங்களால் இயன்ற நிதி உதவியினை நன்கொடையாக தந்து நமது அறக்கட்டளையின் குழும நிதியை ( Corpus Fund ) அதிகரிக்க உதவ வேண்டுமென கேட்டு கொள்கிறோம்.

ரூ. 1,00,000/- ம் அதற்கு மேலும் நன்கொடை வழங்கும் நண்பர்கள் "PATTERN MEMBER" களாக கௌரவிக்கப்பட இருக்கிறார்கள்.

அனைத்து நிதி பெருக்கமும் நமது முன்னாள் வணிகவியல் துறை மாணவர்களிடமிருந்து மட்டுமே பெறப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது அறக்கட்டளையின் சேவை வெகுவிரைவில் தேவைப்படும் அனைத்து முன்னாள் வணிகவியல் மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் நமது SVN-COMAT அறக்கட்டளையின் நிதி ஆதாரத்தையும், ஆயுட்கால உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க தாங்களும், தங்கள் நண்பர்களும் இணைந்து அறக்கட்டளை சிறப்பாக செயல்பட உதவிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் நம் SVN-COMAT அறக்கட்டளையின் நோக்கம், அமைப்பு, செயல்பாடு மற்றும் சட்ட திட்டங்கள் அனைத்தும் நமது அறக்கட்டளையின் Web Site : www.svncomat.org யில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்

(G. ஜெயசீலன் )

இயக்குநர் (நிர்வாகம்)